செய்தி வெளியீடு எண்: 1036 நாள்: 24.11.2010.

**<u>உணவுப்பொருள் வழங்கல் துறையின் சைதாப்பேட்டை உதவி ஆணையர் அலுவலகத்திலும், வெங்கடாபுரம் நியாயவிலைக் கடையிலும் மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்கள் திடீர் ஆய்வு</u>**

உணவுப்பொருள் வழங்கல் துறையின் சைதாப்பேட்டை உதவி ஆணையர் அலுவலகத்தில் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்கள் இன்று (24.11.2010) காலை 10.30 மணிக்கு திடீர் ஆய்வு மேற்கொண்டார்கள்.

உணவுத் துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்கள் உணவுப்பொருள் வழங்கல் துறை ஆணையர் திரு. கா. பாலச்சந்திரன், இ.ஆ.ப. அவர்களுடன் இன்று திடீரென்று சைதாப்பேட்டை உதவி ஆணையர் அலுவலகத்திற்கு ஆய்வுக்கு சென்றார்கள். சென்னை மாநகராட்சி உறுப்பினர் திரு. மகேஷ் அவர்கள் உடன் இருந்து, அப்பகுதிவாழ் மக்களின் குறைகளை கேட்டு அமைச்சர் அவர்களிடத்தில் தெரிவித்தார்.

குடும்ப அட்டைகளில் விலாச மாற்றம் செய்யவும், புதிய அட்டைகளுக்கான விண்ணப்பங்களை கொடுக்கவும், வரிசையில் நின்று கொண்டிருந்த பொது மக்களிடம் விசாரணை செய்து அவர்களுடைய குறைகளை கேட்டறிந்து அலுவலகத்திற்குள் சென்று புதிய குடும்ப அட்டை வழங்குவதற்கான பதிவேடுகளை பெற்று ஆய்வு செய்தார்கள். பெரும்பாலான விண்ணப்பதாரர்கள் விலாச மாற்றம் செய்வதற்கு விண்ணப்பங்கள் அளித்து நிலுவையிலிருந்ததை அறிந்த அமைச்சர் அவர்கள் களப் பணியாளர்களை அழைத்து அவர்களுடைய பணிகளை ஆய்வு செய்தார்கள். விலாச மாற்றம் எத்தனை நாட்களில் செய்து வழங்கப்படும் என்பதை பொது மக்களிடம் தெரிவித்து உரிய காலத்திற்குள் விசாரணை செய்து விலாச மாற்றம் செய்து வழங்க வேண்டும் என்றும், பொது மக்களை இதற்காக அலைகழிக்கக் கூடாது என்றும் ஆணையிட்டார்கள்.

புதிய குடும்ப அட்டைக்காக விண்ணப்பிக்கும்போது உடன் இணைத்து சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் குறித்து விளம்பரப் பலகை வைக்கப்பட வேண்டும் என்று அறிவுறுத்தினார்கள். பதிவேடுகள் பராமரிப்பதில் உள்ள குறைபாடுகளை சுட்டிக்காட்டி சில பதிவேடுகளை மாற்றி அமைக்க ஆணையிட்டார்கள். திருமதி பிரேமா என்பவர் குடும்ப அட்டைக்கான விண்ணப்பத்துடன் எவ்வித ஆவணமும் வழங்க இயலாத சூழ்நிலையை விளக்கி கூறியதால், மனிதாபிமான அடிப்படையில் உரிய விசாரணை மேற்கொண்டு குடும்ப அட்டை வழங்க ஆணையிட்டார்கள்.

பொது மக்கள் ஒவ்வொருவராக வந்து அவர்களுடைய குறைகளை அமைச்சரிடம் தெரிவித்தார்கள். அவற்றையெல்லாம் கேட்டு, உடனடியாக தீர்வு செய்ய ஆணையிட்டார்கள். இட நெருக்கடியால் பொது மக்கள் மிகவும் அவதிப்படுவதால், சைதாப்பேட்டை உதவி ஆணையர் அலுவலகத்திற்கு புதிய கட்டிடம் கட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் தெரிவித்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்தார்கள். ஒவ்வொரு மாதமும் 3ம் தேதிக்குள் ஒதுக்கீட்டு ஆணை பிறப்பிக்கப்பட்டு அனுப்பப்பட வேண்டும் என்று அறிவுறுத்தினார்கள்.

உதவி ஆணையர் அலுவலகத்தில் உள்ள அனைத்து அலுவலர்களையும் அழைத்து அறிவுரை வழங்கி தமிழக முதலமைச்சர் அவர்களின் திட்டங்கள் அனைத்தும் பொது மக்களைச் சென்றடைய ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டும் என்றும், பொது மக்களிடம் கனிவுடனும், மரியாதையாகவும் நடந்து கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்கள்.

உதவி ஆணையர் அலுவலக ஆய்வுக்கு பின்னர் திருவல்லிக்கேணி நகரக் கூட்டுறவு பண்டகசாலையின் (TUCS) வெங்கடாபுரம் நியாயவிலைக் கடையை ஆய்வு செய்தார்கள். குடும்ப அட்டைகளுடன் காத்திருந்த பொது மக்களிடம் அனைத்து பொருட்களும் சரியான அளவில் வழங்கப்படுகிறதா என்பதை விசாரணை செய்தார்கள். ஏதேனும் குறைபாடுகள் இருந்தால் உடனடியாக தொலைபேசியில் தெரிவிக்கும்படி பொது மக்களிடம் கேட்டுக் கொண்டார்கள். நியாய விலைக் கடையில் அனைத்து பொருட்களும், அனைத்து நாட்களிலும் எவ்வித புகார்களுக்கும் இடமின்றி வழங்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்கள்.

இந்த ஆய்வில் உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர் திரு. கா. பாலசந்திரன், இ.ஆ.ப., துணை ஆணையர்கள் திரு. சொ. சண்முகநாதன், திரு. எம். பாலசுப்பிரமணியன், திரு. எஸ். விஜயன், ஆகியோர் பங்கு பெற்றனர்.

வெளியீடு:–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.